தலைப்பு 204 - இந்து சமய, கலாசார அலுவல்கள் திணைக்களம் - 2024

1. நிதிக்கூற்றுக்கள்

1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

தலைப்பு 204 - இந்து சமய, கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்றுடன் கூடிய 2024 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்துடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(1) பிரிவின் பிரகாரம் இந்து சமய, கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் உள்ளடங்கிய பொழிப்பறிக்கை 2025 மே 30 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(2) பிரிவின் பிரகாரம் திணைக்களத்திற்குரிய விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2025 யூலை 08 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படுகின்றது.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தை தவிர்த்து, 2024 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான இந்து சமய, கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் நிதிக்கூற்றுக்களில், நிதி நிலைமை, நிதிச் செயலாற்றல் மற்றும் காசுப்பாய்ச்சல், நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்பு 1 இல் குறிப்பிடப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்களை தயாரிப்பதற்கான அடிப்படைக்கு இணங்க அனைத்து பொருண்மையானவை தொடர்பிலும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது. இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

1.3 விடயமொன்றை வலியுறுத்தல் - நிதிக்கூற்றுக்களை தயாரிப்பதற்கான அடிப்படை

இந்த நிதிக்கூற்றுக்களை தயாரிக்கும் அடிப்படையை விபரிக்கும் நிதிக்கூற்றுக்களுக்குரிய குறிப்பு 1 தொடர்பில் கவனம் செலுத்துமாறு கோருகின்றேன். நிதிக்கூற்றுக்கள் அரசின் நிதிப்பிரமாணம் 150 மற்றும் 151 மற்றும் 2025 பெப்ரவரி 21 ஆந் திகதி திருத்தப்பட்ட 2024 திசெம்பர் 16 ஆந் திகதிய அரச கணக்குகள் வழிகாட்டி இலக்கம் 06/2024 இன் பிரகாரம் இந்து சமய, கலாசார அலுவல்கள் திணைக்களத்தினதும், பொதுத் திறைசேரியினதும் மற்றும் பாராளுமன்றத்தினதும் தேவைப்பாட்டுக்காக தயாரிக்கப்பட்டுள்ளது. அதனால், இந்த நிதிக்கூற்றுக்கள் வேறு நோக்கங்களுக்கு பொருத்தமற்றதாக இருக்கக்கூடும். எனது அறிக்கை இந்து சமய, கலாசார அலுவல்கள் திணைக்களத்தினதும், பொதுத் திறைசேரியினதும் மற்றும்

இலங்கை பாராளுமன்றத்தினதும் பயன்பாட்டினை மாத்திரம் நோக்கமாக கொண்டுள்ளது. இந்த விடயம் தொடர்பில் எனது அபிப்பிராயத்தில் எந்த மாற்றமும் ஏற்படாது.

1.4 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும், கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பு

அரசின் நிதிப்பிரமாணம் 150 மற்றும் 151 மற்றும் 2025 பெப்ரவரி 21 ஆந் திகதி திருத்தப்பட்ட 2024 திசெம்பர் 16 ஆந் திகதிய அரச கணக்குகள் வழிகாட்டி இலக்கம் 06/2024 இன் பிரகாரம் அனைத்து பொருண்மையானவை தொடர்பிலும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று அற்ற நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) பிரிவின் பிரகாரம் திணைக்களத்தால் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு முடியுமான வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் புத்தகங்கள் மற்றும் அறிக்கைகளை பேணிச் செல்லல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் திணைக்களத்தின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்று தயாரிக்கப்பட்டு பேணிச் செல்லப்படுவதனை கணக்கீட்டு உத்தியோகத்தர் சான்றுறுதிப்படுத்த வேண்டியதுடன் அம்முறைமையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வொன்று மேற்கொள்ளப்பட்டு அதற்கமைய அம்முறைமையை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் மேற்கொள்ளப்படல் வேண்டும்.

1.5 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றை பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்ககூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் எடுக்கப்படும் பொருளாதார தீர்மானங்கள் மீதான தாக்கத்தின் அடிப்படையில் தங்கியிருக்கும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக என்னால் கணக்காய்வின் போது துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறைசார் பின்னணியுடன் செயற்படுத்தப்பட்டது. என்னால் மேலும்,

- வெளியிடப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கு அடிப்படையொன்றை வழங்கும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று உருவாகும் ஆபத்தினை இனங்காணுதல் மற்றும் மதிப்பீட்டு செய்தல் என்பவற்றிற்காக சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடப்பட்டு செயற்படுத்தப்பட்டன. தவறுதலாக காண்பிப்பதன் காரணமாக இடம்பெறும் பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கத்தினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு,

தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல், தவறாக காண்பித்தல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் போன்ற காரணங்களால் ஆகும்.

- உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் எண்ணத்தில் அல்லாமல் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு உள்ளகக் கட்டுப்பாடு தொடர்பாக தெளிவொன்று பெற்றுக் கொள்ளப்பட்டது.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதாக மதிப்பீடு செய்தல்.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான கொடுக்கல் வாங்கல்கள் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாகவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக் கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலும் மதிப்பீடு செய்யப்பட்டது.

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு தெரியப்படுத்தியுள்ளேன்.

1.6 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

(அ) வருமானப் பெறுவனவுகள்

கணக்காய்வு அவதானிப்புக்கள்	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள்	பரிந்துரை
திணைக்களத்தின் பரீட்சை மீதியின் பிரகாரம் சேகரிக்கப்பட்ட வருமானம் ரூபா 16,047,868 ஆக இருந்த போதிலும் கட்டுநிதி சீராக்கல் கூற்றிலும், காசுப் பாய்ச்சல் கூற்றிலும் அது ரூபா 16,043,318 ஆக ரூபா 4,550 குறைவாகவும், திணைக்கள பரீட்சையின் பிரகாரம் ஏனைய வருமானத் தலைப்புக்களுக்காக அறிக்கையிடுகின்ற நிறுவனத்தால் முற்பணம் ‘‘பீ’’ கணக்கில் வைக்கப்பட்ட செலவிடல்கள் ரூபா 1,108,546 ஆக இருந்த போதும் கட்டுநிதி சீராக்கல் கூற்றில் அது ரூபா 1,113,096 ஆக ரூபா 4,550 அதிகரித்தும் குறிப்பிடப்பட்டிருந்தது.	ரூபா 4,550 வேறுபாடு ஓய்வூதியத் திணைக்களத்தில் இருந்து மேலதிகமாகக் கிடைத்த தொகையாக இருந்தது எனவும் இது தற்போது அது சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுவதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.	சரியான மீதிகளை நிதிக் கூற்றுக்களில் உள்ளடக்குதல் வேண்டும்.

(ஆ) மீண்டெழும் செலவினம்

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள்	பரிந்துரை
(i)	204-2-1-0-1003 செலவின விடயத்தில் திணைக்கள ஏடுகளின் பிரகாரம் மொத்த செலவினம் ரூபா 44,710,564 ஆக இருந்த போதிலும் அது ரூபா 44,803,464 ஆக ஏசீஏ 2(ii) செலவினக் கூற்றில் குறிப்பிடப்பட்டதன் காரணமாக ரூபா 92,900 வேறுபாடும், அந்த செலவின விடயத்திற்காக திணைக்கள ஏடுகளின் பிரகாரம் சேமிப்பு ரூபா 2,007,435 ஆகவும் ஏசீஏ 2(ii) இல் ரூபா 1,914,535 ஆகவும் குறிப்பிடப்பட்டதன் காரணமாக ரூபா 92,900 வேறுபாடும் காணப்பட்டது.	உரிய சரி செய்தல்களை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டதாக அறிவிக்கப்பட்டுள்ளது.	திணைக்கள புத்தகங்களில் சரியான தொகையினை உள்ளடக்குதல் வேண்டும்.
(ii)	204-2-1-0-1409-104 செலவின விடயத்தில் திணைக்களப் புத்தகங்களின் பிரகாரம் மொத்த செலவினம் ரூபா 3,871,351 ஆக இருந்த போதும், அது ரூபா 4,481,266 ஆக ஏசீஏ 2(ii) செலவினக் கூற்றில் குறிப்பிடப்பட்டதன் காரணமாக ரூபா 609,915 வேறுபாடும், அந்த செலவின விடயத்திற்காக திணைக்கள புத்தகங்களின் பிரகாரம் சேமிப்பு ரூபா 3,128,648 ஆக இருந்த போதும் ஏசீஏ 2(ii) இல் ரூபா 2,518,733 ஆகவும் குறிப்பிடப்பட்டதன் காரணமாக ரூபா 609,915 வேறுபாடும் காணப்பட்டது.	உரிய சரி செய்தல்களை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டதாக அறிவிக்கப்பட்டுள்ளது.	திணைக்கள புத்தகங்களில் சரியான தொகையினை உள்ளடக்குதல் வேண்டும்.
(iii)	செலவின விடயம் 204-2-1-0-1203-002 இன் கீழ் திணைக்கள புத்தகங்களின் பிரகாரம் சேமிப்பு ரூபா 58,000 ஆக இருந்த போதும் ஏசீஏ 2(ii) செலவினக் கூற்றில் ரூபா 64,000 ஆகக் குறிப்பிடப்பட்டதன் காரணமாக ரூபா 6,000 வேறுபாடு காணப்பட்டது.	உரிய சரி செய்தல்களை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டதாக அறிவிக்கப்பட்டுள்ளது.	திணைக்கள புத்தகங்களில் சரியான தொகையினை உள்ளடக்குதல் வேண்டும்.
(iv)	செலவின விடயம் 204-2-1-0-1409-140 இன் கீழ் திணைக்கள புத்தகங்களின் பிரகாரம் சேமிப்பு ரூபா 1,230,555 ஆக இருந்த போதும் ஏசீஏ 2(ii) செலவினக் கூற்றில் ரூபா 1,320,555 ஆகக் குறிப்பிடப்பட்டதன் காரணமாக ரூபா 90,000 வேறுபாடு காணப்பட்டது.	உரிய சரி செய்தல்களை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டதாக அறிவிக்கப்பட்டுள்ளது.	திணைக்கள புத்தகங்களில் சரியான தொகையினை உள்ளடக்குதல் வேண்டும்.

(v) கட்டு நிதி இணக்கக் கூற்றில் ஏனைய தலைப்புக்களுக்காக அறிக்கையிடுகின்ற நிறுவனத்தால் செய்யப்பட்ட செலவினம் ரூபா 539,863 ஏனைய தலைப்பிற்காக அறிக்கையிடுகின்ற நிறுவனத்தால் முற்பணம் "பீ" கணக்கிற்காக மேற்கொள்ளப்பட்ட வரவு வைத்தலாக குறிப்பிடப்பட்டிருந்தது.	கருத்து தெரிவிக்கப்படவில்லை.	2025 பெப்ரவரி 21 ஆந் திகதி திருத்தப்பட்ட 2024 திசெம்பர் 16 ஆந் திகதிய இலக்கம் 06/2024 என்ற அரச கணக்குகள் வழிகாட்டியின் ஆலோசனையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

(இ) வைப்புக்கள்

கணக்காய்வு அவதானிப்புக்கள்	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள்	பரிந்துரை
6000-0-0-1-120 என்ற பிணை வைப்புப் பதிவேட்டில் மீளாய்வாண்டின் இறுதியில் மீதியொன்று குறிப்பிடப்படாமல் இருந்த போதிலும் ஏசீஏ 4 இல் ரூபா 42,420 மீதி காண்பிக்கப்பட்டிருந்தது.	உரிய சரி செய்தல்களை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது.	வைப்பு பேரேட்டை நாளது வரையாக பேணிச் செல்லல் வேண்டும்.

(ஈ) ஆதனங்கள் பொறிகள் மற்றும் உபகரணங்கள்

கணக்காய்வு அவதானிப்புக்கள்	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள்	பரிந்துரை
முன்னைய ஆண்டில் கணக்காய்வு செய்யப்பட்ட நிதிக்கூற்றுக்களில் ஏசீஏ 6 நிதியல்லாச் சொத்துக்களில் ஆண்டின் இறுதி மீதி ரூபா 159,099,465 ஆக இருந்த போதிலும் மீளாய்வாண்டில் ஏசீஏ 6 இல் ஆரம்ப மீதி ரூபா 161,124,465 ஆக குறிப்பிடப்பட்டதுடன் வேறுபாடு ரூபா 2,025,000 ஆகும்.	ரூபா 2,025,000 வேறுபாடு மோட்டார் வாகன மாற்றல்கள் மற்றும் முச்சக்கர வண்டி விற்றுத் தீர்த்தலை உள்ளடக்கியதன் காரணமாக ஏற்பட்டிருந்ததாகவும் முறையே ரூபா 2,200,000 மற்றும் ரூபா 175,000 தொகை 2023 ஆம் ஆண்டின் ஆரம்ப மீதியில் சீராக்கப் பட்டிருந்தமையால் அது 2024 ஆம் ஆண்டின் தேறிய மீதியில் தாக்கம் ஏற்படுத்தாதிருந்தாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.	நிதிக்கூற்றுக்கள் கடந்த ஆண்டுடன் நேரொத்ததாக இருத்தல் வேண்டும்.

(உ) முற்பணக் கணக்கு மீதி

கணக்காய்வு அவதானிப்புக்கள்	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள்	பரிந்துரை
திணைக்கள கடன்பட்டோர் / கடன்கொடுத்தோர் கட்டுப்பாட்டுக் கணக்கின் பிரகாரம் மீளாய்வாண்டில் காசு செலவு வைத்தல் ரூபா 4,846,846 ஆக இருந்த போதிலும் முற்பணக் கணக்கு தொடர்பான கூற்றில் (ஏசீஏ 5) இல் ரூபா 847,470 ஆகவும் ரூபா 3,999,376 குறைத்தும், ஆண்டில் வரவு குறிப்புக்களின் மூலம் செலவு வைத்தல் ரூபா 1,384,133 ஆகவும் ஏசீஏ 5 இல் ரூபா 5,383,509 ஆக ரூபா 3,999,376 அதிகரித்தும் குறிப்பிடப்பட்டிருந்தது.	முற்பணக் கணக்கு குறியீடு 8493-0-0-204-0-11-09 (செலவு) ரூபா 4,846,846.41 தொகை, காசு மற்றும் குறுக்குப் பதிவாக முறையே ரூபா 847,470 மற்றும் 3,999,376.41 இனால் உள்ளடங்கியிருந்தது. எனினும் அது திறைசேரி அச்சிடலில் தனியாகக் காண்பிக்கப்படாது இருந்ததாக அறிவிக்கப்பட்டுள்ளது.	நிதிக்கூற்றுக்களில் சரியான தொகைகளை உள்ளடக்குதல் வேண்டும்.

(ஊ) ஆவணங்கள் மற்றும் பதிவேடுகள் பேணிச் செல்லப்படாமை

திணைக்களத்தால் கீழே காண்பிக்கப்படுகின்ற சில பதிவேடுகள் முறையாகவும் நாளது வரையாகவும் பேணிச் செல்லப்படாது இருந்தமை தெரிவுக் கணக்காய்வு பரிசோதனைகளின் போது அவதானிக்கப்பட்டது.

கணக்காய்வு அவதானிப்புக்கள்	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள்	பரிந்துரை
(i) பொறுப்புக்கள் தொடர்பான பதிவேடு		
நிதிப்பிரமாணம் 214 இன் பிரகாரம் பொறுப்புக்கள் தொடர்பான பதிவேடு நாளது வரையாக்கப்படவில்லை.	நாளது வரையாகப் பேணிச் செல்வதற்காக உரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளது.	நிதிப்பிரமாணம் 214 இன் பிரகாரம் பொறுப்புக்களை தினமும் பரீட்சிக்கக் கூடிய வகையில் பொறுப்புப் பதிவேட்டில் அந்த பொறுப்புக்கள் குறிப்பிடப்படல் வேண்டும்.
(ii) வைப்பு பேரேடு		
நிதிப்பிரமாணம் 592 இன் பிரகாரம் வைப்பு பதிவேடு நாளது வரையாக்கப்பட்டிருக்க வில்லை.	நாளதுவரையாகப் பேணிச் செல்வதற்காக உரிய நடவடிக்கைகள் எடுப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது.	நிதிப்பிரமாணம் 592 இன் பிரகாரம் வைப்பு பேரேடு நாளதுவரையாக பேணிச் செல்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

2. ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ) பிரிவின் பிரகாரம் பின்வரும் விடயங்களை நான் தெரிவித்துக்கொள்கின்றேன்.

(அ) கணக்காய்வுக்கு சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களுடன் கீழே குறிப்பிடுகின்ற அவதானிப்புக்களின் பிரகாரம் கடந்த ஆண்டின் நிதிக்கூற்றுக்களுடன் இணங்கியிருக்கவில்லை.

கணக்காய்வு அவதானிப்பு	இந்த அறிக்கையின் பந்தியுடனான தொடர்பு
முன்னைய ஆண்டின் கணக்காய்வு செய்யப்பட்ட நிதிக் கூற்றில் ஏசீஏ 6 இல் நிதியல்லாச் சொத்துக்களில் வருட இறுதி மீதி ரூபா 159,099,465 ஆகவும் மீளாய்வாண்டின் ஏசீஏ 6 இன் ஆரம்ப மீதி ரூபா 161,124,465 ஆகவும் குறிப்பிடப்பட்டதன் காரணமாக ரூபா 2,025,000 வேறுபாடு காணப்பட்டது.	1.6.1(ஈ)

(ஆ) முன்னைய ஆண்டிற்குரிய நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக என்னால் வழங்கப்பட்ட பின்வரும் பரிந்துரைகள் அமுல்படுத்தப்பட்டிருந்தது.

3. நிதி மீளாய்வு

3.1 செலவின முகாமைத்துவம்

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள்	பரிந்துரை
(அ)	ஏழு (07) மீண்டெழும் செலவின விடயங்களுக்காக ஏற்பாடு செய்யப்பட்ட கூட்டுமொத்தமான ரூபா 15,450,000 தேறிய நிதியேற்பாட்டில் ரூபா 7,577,284 சேமிக்கப்பட்டிருந்ததுடன் அந்த சேமிப்பு தேறிய நிதியேற்பாட்டின் வீதமாக 32 சதவீதம் முதல் 88 சதவீதம் வரையிலான வீச்சினைக் கொண்டிருந்தது.	தேவைகள் ஏற்படாமை மற்றும் தேசிய வரவு செலவுத் திட்ட சுற்றறிக்கை இலக்கம் 01/2024 இன் பிரகாரம் செலவினங்களைக் கட்டுப்படுத்தியதன் காரணமாக நிதியேற்பாடு சேமிக்கப்பட்டிருந்ததாக அறிவிக்கப்பட்டுள்ளது.	ஒதுக்கப்பட்டிருந்த நிதியேற்பாடு உரிய நிகழ்ச்சித் திட்டங்களுக்காக பயன்படுத்தல் வேண்டும்.
(ஆ)	ஒரு மூலதன செலவின விடயத்திற்காக ரூபா 1,000,000 ஆன தேறிய நிதியேற்பாட்டில் ரூபா 474,200 சேமிக்கப்பட்டிருந்ததுடன் அந்த சேமிப்பு தேறிய நிதி	தேசிய வரவு செலவுத் திட்ட சுற்றறிக்கை இலக்கம் 01/2024 இன் பிரகாரம் செலவினங்களைக்	மதிப்பீடு தயாரிக்கும் போது கட்டாய பயிற்சிகளுக்காக மாத்திரம் நிதியேற்பாட்டை

	ஏற்பாட்டில் 47 சதவீதமாகும்.	கட்டுப்படுத்தியதன் காரணமாக நிதியேற்பாடு சேமிக்கப்பட்டதாக அறிவிக்கப்பட்டுள்ளது.	ஒதுக்குதல் வேண்டும்.
(இ)	ஒரு மீண்டெழும் செலவின விடயத்திற்காக ரூபா 500,000 மற்றும் ஒரு மூலதன செலவு விடயத்திற்காக ரூபா 1,000,000 நிதியேற்பாடு வருடாந்த மதிப்பீட்டில் ஒதுக்கப்பட்டிருந்த போதிலும் ஒட்டுமொத்த நிதியேற்பாடும் சேமிக்கப்பட்டிருந்தது.	தேசிய வரவு செலவுத் திட்ட சுற்றறிக்கை இலக்கம் 01/2024 இன் பிரகாரம் செலவினங்களைக் கட்டுப்படுத்தியதன் காரணமாக நிதியேற்பாடு சேமிக்கப்பட்டதாக அறிவிக்கப்பட்டுள்ளது.	ஒதுக்கப்பட்டிருந்த நிதியேற்பாடு உரிய நிகழ்ச்சித் திட்டங்களுக்காக பயன்படுத்துதல் வேண்டும்.
(ஈ)	இரண்டு (02) மீண்டெழும் செலவின விடயங்களுக்காக கூட்டுமொத்தமாக ரூபா 550,000 ஆன நிதியேற்பாடு நிதிப்பிரமாணம் 66 இன் கீழ் மாற்றப்பட்டிருந்த போதிலும் மாற்றப்பட்ட ஒட்டுமொத்த நிதியேற்பாடும் சேமிக்கப்பட்டிருந்தது.	தேசிய வரவு செலவுத் திட்ட சுற்றறிக்கை இலக்கம் 01/2024 இன் பிரகாரம் செலவினங்களைக் கட்டுப்படுத்தியதன் காரணமாக நிதியேற்பாடு சேமிக்கப்பட்டதாக அறிவிக்கப்பட்டுள்ளது.	அத்தியாவசிய செலவினங்களைச் செய்வதற்காக ஒதுக்கப்பட்டிருந்த நிதியேற்பாடு உரிய நிகழ்ச்சித் திட்டங்களுக்காக பயன்படுத்தல் வேண்டும்

3.2 பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் / கணக்கீட்டு உத்தியோகத்தரினால் மேற்கொள்ள வேண்டிய உறுதிப்படுத்தல்கள்

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 38 ஆவது பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் / கணக்கீட்டு உத்தியோகத்தரால் பின்வரும் விடயங்கள் தொடர்பாக உறுதிப்படுத்த வேண்டியிருந்த போதிலும் அதன் பிரகாரம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

கணக்காய்வு அவதானிப்புக்கள்	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள்	பரிந்துரை
கணக்காய்வு செய்யப்படுகின்ற நிறுவனத்திற்குரிய வருடாந்த அறிக்கை பாராளுமன்றத்தில் சமர்ப்பித்தற்கு பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் கவனத்தில் கொள்ள வேண்டியிருந்த போதிலும் அறிக்கையின் 4.1 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட கணக்காய்வு அவதானிப்புக்களின் காரணமாக அந்த தேவை நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை.	உரிய அறிக்கை சரியான பிரகாரம் பாராளுமன்றத்தில் சமர்ப்பிப்பதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.	2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 38 ஆம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

3.3 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமானங்களுடன் இணங்காமை

தெரிவுக் கணக்காய்வு பரிசோதனைகளின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களின் ஏற்பாடுகளுக்கு இணங்காத சந்தர்ப்பங்கள் கீழே பகுப்பாய்வு செய்து காண்பிக்கப்படுகின்றது.

சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமானங்களுடனான தொடர்பு	இணங்காமைகள்	கருத்துரை	பரிந்துரை
(அ) அரச நிர்வாக சுற்றறிக்கை			
2018 சனவரி 24 ஆம் திகதிய இலக்கம் 02/2018 என்ற அரச நிர்வாக சுற்றறிக்கையின் 6.5 ஆம் பந்தி	மனித வள அபிவிருத்தி திட்டம் தயாரித்தல், இயலளவு அபிவிருத்தி நிகழ்சித் திட்டத்தை அபிவிருத்தி செய்தல், திறன் அபிவிருத்தி நிகழ்சித் திட்டத்தை அமுல்படுத்தல் தொடர்பாக பொறுப்புக்கள் கையளிக்கும் சிரேஸ்ட உத்தியோகத்தர் நியமிக்கப்பட்டிருக்க வில்லை	அங்கீகரிக்கப்பட்ட பதவியணியில் SLAS(III) உதவிப் பணிப்பாளர் பதவிக்காக மூன்று வெற்றிடங்கள் காணப்பட்டமையால் சிரேஸ்ட நிலையின் உத்தியோகத்தர்கள் காணப்படாமையின் காரணமாக தற்போது இருக்கின்ற உத்தியோகத்தர்களால் மனித வள அபிவிருத்தித் திட்டம் தயாரிக்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.	அரச நிர்வாக சுற்றறிக்கையின் பிரகாரம் உரிய நியமனங்கள் மேற்கொள்ளப்படல் வேண்டும்.
(ஆ) அரச கணக்குகள் வழிகாட்டி			
2024 திசெம்பர் 16 ஆந் திகதிய இலக்கம் 06/2024 என்ற அரச கணக்குகள் வழிகாட்டியின் 8.3 ஆம் பந்தி	சகல அறிக்கையிடுகின்ற நிறுவனத்தினால் வைப்புக்களுக்காக இணக்கக் கூற்று தயாரித்து 2025 பெப்ரவரி 28 ஆந் திகதி அல்லது அதற்கு முன் அரச கணக்குகள் திணைக்களத்திற்கு சமர்ப்பிக்க வேண்டியிருந்த போதிலும் உரிய	அடுத்து வரும் ஆண்டில் இருந்து வைப்புக்களை இணக்கம் செய்து குறித்துரைத்த நேரத்தில் தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.	அரச கணக்குகள் வழிகாட்டியின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

இணக்கக் கூற்று 2025 மே 09 ஆந் திகதி சமர்ப்பிக்கப் பட்டிருந்தது.		

4. செயற்பாட்டு மீளாய்வு

4.1 வருடாந்த செயலாற்றல் அறிக்கை

கணக்காய்வு அவதானிப்புக்கள்	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள்	பரிந்துரை
2024 இன் 44 ஆம் இலக்க அரச நிதி முகாமைத்துவ சட்டத்தின் 47(4) உப பிரிவின் பிரகாரம் வருடாந்த செயலாற்றல் அறிக்கை நிதியாண்டு முடிவடைந்து 180 நாட்கள் அல்லது அதற்கு முன்னர் வெளியிட வேண்டியிருந்த போதிலும் 2023 ஆம் ஆண்டின் செயலாற்றல் அறிக்கை 08 மாத தாமதத்தின் பின்னர் 2025 மார்ச் 05 ஆம் திகதி வெளியிடப்பட்டிருந்தது.	எதிர்காலத்தில் நடவடிக்கை எடுப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது.	சட்டத்தின் பிரகாரம் வருடாந்த செயலாற்றல் அறிக்கை குறித்துரைத்த திகதியில் அல்லது அதற்கு முன்னர் வெளியிடுதல் வேண்டும்.

4.2 சொத்துக்கள் முகாமைத்துவம்

கணக்காய்வு அவதானிப்புக்கள்	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள்	பரிந்துரை
திணைக்களத்திற்கு சொந்தமான மூன்று வாகனங்கள் காணப்பட்ட போதும், 02 சாரதி பதவிகள் வெற்றிடமாகக் காணப்பட்டமையால் இரண்டு வாகனங்கள் விளைவற்றுக் காணப்பட்டதுடன் அதன் காரணமாக திணைக்களத்தால் திட்டமிடப்பட்ட பணிகளை நிறைவேற்றுவதில் தாமதம் காணப்பட்டது.	வெற்றிடங்கள் தொடர்பாக உரிய நிறுவனத்திற்கு தெரிவிக்கப்பட்டுள்ளது என அறிவிக்கப்பட்டுள்ளது.	வெற்றிடமாகவுள்ள சாரதி பதவிகளை விரைவாக நிரப்பி உரிய வாகனங்களைப் பயன்படுத்துதல் வேண்டும்.

4.3 முகாமைத்துவ நலிவுகள்

கணக்காய்வு அவதானிப்புக்கள்	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள்	பரிந்துரை
(அ) 20 வருடங்களுக்கு மேற்பட்ட காலம் திணைக்களத்தில் நடவடிக்கைகளுக்காக பயன்படுத்தப்படுகின்ற நாவலர் கலாசார நிலையம் மற்றும் குருகுலம் ஆனபந்தி உப அலுவலகம் அமைந்துள்ள கட்டிடம் மற்றும் அதற்குரிய நிலம் யாழ்ப்பாணம் மாநகர	கருத்து தெரிவிக்கப்பட வில்லை.	திணைக்களத்திற்கு கையேற்பதற்குத் தேவையான நடவடிக்கைகள் எடுத்தல் வேண்டும்.

	சபையில் இருந்து திணைக்களத்திற்கு கையேற்கப்படாதிருந்ததுடன் அதற்குரியதாக யாழ்ப்பாண உயர் நீதிமன்றத்தில் வழக்கு விசாரணையில் காணப்படுகின்றது.		
(ஆ)	மீளாய்வாண்டில் திணைக்களத்தால் 183 இந்துக் கோயில்களுக்காக ரூபா 33 மில்லியன் நிதி உதவி வழங்கப்பட்டிருந்த போதிலும் அதற்காக கோவில்களைத் தெரிவு செய்தல், வழங்கப்படுகின்ற நிதி உதவியின் அளவு மற்றும் முன்னுரிமை போன்றவற்றுக்குரிய அளவுகோல்களை இனங்கண்டு அங்கீகரிக்கப்படுகின்ற முறையான திட்ட முறைமை ஒன்று காணப்படாமல் இருந்ததுடன் உதவி வழங்கியதன் பின்னர் உரிய நிர்மாணங்கள் நவீன மயப்படுத்தல் தொடர்பாக பின்தொடர் நடவடிக்கைகளும் திணைக்களத்தால் மேற்கொள்ளப்படுகின்றமை கணக்காய்வில் அவதானிக்கப்படவில்லை.	அளவுகோல்கள் காலத்திற்கு காலம் மாற்றமடைகின்றது எனவும், முன்னுரிமை அடிப்படையில் நிதி உதவி வழங்கப்படுவதாகவும், பிரதேச செயலகம் ஊடாக நிதி உதவி வழங்குகின்றமையினால் அந்த அலுவலகங்களுக்கு நியமிக்கப்பட்டுள்ள அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் (இந்து / கலாசாரம்) மற்றும் தொழில்நுட்ப உத்தியோகத்தர்கள் பிரதேச செயலகம் ஊடாக தகவல்கள் வழங்குவதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.	நிதி உதவி வழங்குவதற்காக குறித்துரைத்த குறிகாட்டிகள் மற்றும் முறையான திட்டம் ஒன்று அங்கீகரித்து கொள்ள வேண்டியதுடன் அது தொடர்பாக பின் தொடர் நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

5. நல்லாளுகை

5.1 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு

கணக்காய்வு அவதானிப்புக்கள்	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள்	பரிந்துரை
முகாமைத்துவக் கணக்காய்வுத் திணைக்களத்தின் 2019 சனவரி 12 ஆம் திகதி இலக்கம் DMA/01/2019 என்ற சுற்றறிக்கையின் பிரகாரம் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக் கூட்டம் ஆகக் குறைந்தது காலாண்டிற்கு ஒரு தடவை நடாத்த வேண்டியிருந்த போதிலும் மீளாய்வாண்டில் மூன்றாவது காலாண்டில் ஒரு கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு கூட்டம் மாத்திரம் நடாத்தப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் இறுதிக் காலாண்டின் கூட்டம் 2025 பெப்ரவரி 18 ஆந் திகதி நடாத்தப்பட்டிருந்தது.	2024 ஆம் ஆண்டின் போது இரண்டு கூட்டங்கள் நடாத்தப்பட்டதுடன் எதிர் காலத்தில் காலாண்டு ரீதியில் கூட்டங்களை நடாத்துவதற்கு நடவடிக்கை எடுப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது.	சுற்றறிக்கையின் பிரகாரம் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக் கூட்டங்கள் ஆகக் குறைந்தது காலாண்டுக்கு ஒரு தடவை நடாத்தப்படல் வேண்டும்.